
ஸ்ரீ குப்பை தொட்டி மாணிக்க சுவாமிகள் திருவடி சரணம்
ஸ்ரீ பொன்மலை பாபா சுவாமிகள் திருவடி சரணம்

# பங்குனி மாத குருபூஜை




அன்பர்களுக்கு வணக்கம். வருகின்ற பங்குனி மாதம் 5ஆம் நாள் உத்திரட்டாதி நட்சத்திரத்தில் (19.03.26) வியாழக்கிழமை அன்று காலை 10.30 மணிக்கு மேல் 12.30 மணிக்குள் மாணிக்க சுவாமிகள் சமாதி அருகில் உள்ள ஸ்ரீ பொன்மலை பாபா சுவாமிகளுக்கு மாத குருபூஜை நடைபெற உள்ளது.

அதேசமயம் அன்பர்கள் அனைவரும் கலந்து கொண்டு குருவருள் பெறுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இப்படிக்கு
ரெ.குழந்தை வேலு, செல் : 9842265717


## ஸ்ரீராம் பாலிடெக்னிக் கல்லூரியில் 42வது ஆண்டுவிழா சிறப்பாக நடைபெற்றது




திருவள்ளூர் மாவட்டம் பெருமாள்பட்டில் அமைந்துள்ள ஸ்ரீராம் பாலிடெக்னிக் கல்லூரியில் 42 வது ஆண்டுவிழா சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் மூன்றாம் ஆண்டு மாணவர் கௌசிக், வரவேற்புரை ஆற்றினார். இவ்விழாவில் ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் B.R.ரமேஷ் பாபு, ஸ்ரீராம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் முனைவர் D.சரவணன் மற்றும் ஸ்ரீராம் வித்யாமந்திர் பள்ளி முதல்வர் நீ.நீ.ஸ்ரீனிவாசன் ஆகியோர் விழாவில் பங்கேற்று சிறப்பித்தனர்.

சிறப்பு விருந்தினராக Digiedze Soft Solution Pvt. Ltd நிறுவனத்தின், அசோசியேட் டைரக்டர் பூபதி துரைவேல், கல்வி மற்றும் விளையாட்டில் சிறப்பாக செயல்பட்டு வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகளை வழங்கி சிறப்புரை ஆற்றினார். கல்லூரி முதல்வர் முனைவர் V.தத்தாத்ரேயா ஆண்டறிக்கை வாசித்தார். மூன்றாம் ஆண்டு மாணவி M.வினிதா நன்றியுரை ஆற்ற நாட்டுப்பண்ணுடன் விழா இனிதே நிறைவுற்றது.

## ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியில் 33வது கல்லூரி தின விழா சிறப்பாக நடைபெற்றது: தமிழ்நாடு ஸ்டார்ட்அப் மற்றும் இனோவேஷன் மிஷன் இணை இயக்குநர் டாக்டர் இ.பாஸ்கரன் சிறப்பு விருந்தினராக பங்கேற்றார்




திருவள்ளூர் மாவட்டம், பெருமாள்பட்டு பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியில் 33 வது கல்லூரி தின விழா கல்லூரியின் முக்கிய அரங்கில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் கல்லூரி நிர்வாகம், பேராசிரியர்கள், மாணவர்கள் மற்றும் சிறப்பு விருந்தினர்கள் கலந்து கொண்டு கல்லூரியின் கடந்தாண்டு சாதனைகளை நினைவு கூர்ந்தனர்.

விழா காலை 10.00 மணிக்கு இறை வணக்கத்துடன் தொடங்கியது. தொடர்ந்து பாரம்பரிய மரபுப்படி குத்துவிளக்கு ஏற்றுதல் நடைபெற்றது. அதன் பின்னர் மாணவிகளின் வரவேற்பு நடனம் நிகழ்ச்சிக்கு சிறப்பூட்டியது.

கல்லூரி முதல்வர் டாக்டர் பி.ஆர்.ரமேஷ் பாபு வரவேற்புரை வழங்கி, ஆண்டறிக்கையை சமர்ப்பித்தார். அதில் கல்லூரியின் கல்வி சார் முன்னேற்றம், ஆராய்ச்சி செயல்பாடுகள், மாணவர்களின் வேலைவாய்ப்பு சாதனைகள், மற்றும் கல்வி, விளையாட்டு, கலாச்சாரம் உள்ளிட்ட துறைகளில் மாணவர்கள் பெற்றுள்ள வெற்றிகள் குறித்து விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டது.

இவ்விழாவில் ஸ்ரீராம் கல்வி அறக்கட்டளையின் தலைவர் டாக்டர் ஆர்.நாராயணசாமி தலைமை உரையாற்றி, கல்வி வளர்ச்சியுடன் புதுமை சிந்தனையும் மாணவர்களுக்கு அவசியம் எனக் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்ச்சிக்கு தமிழ்நாடு ஸ்டார்ட்அப் மற்றும் இனோவேஷன் மிஷன் (Tamil Nadu Startup and Innovation Mission) இணை இயக்குநர் டாக்டர் இ.பாஸ்கரன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றினார். தொழில்நுட்ப முன்னேற்றத்துடன் புதுமை சிந்தனை மற்றும் தொழில் முனைவுத் திறனை வளர்த்துக்கொள்ள மாணவர்களை அவர் ஊக்குவித்தார்.

விழாவின் முக்கிய நிகழ்வாக கல்வி, சயின்ஸ் எக்ஸ்போ, கலாச்சாரம் மற்றும் விளையாட்டு துறைகளில் சிறந்து விளங்கிய மாணவர்கள் மற்றும் கல்லூரி பணியாளர்களுக்கு பரிசுகள் மற்றும் பாராட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியின் முழு ஏற்பாடுகளையும் இயந்திர பொறியியல் துறைத் தலைவர் டாக்டர் ஜி.சுகன்யா சிறப்பாக ஒருங்கிணைத்தார்.

## எங்களை காரணம் காட்டுவது நியாயமல்ல - கம்யூனிஸ்டுகளுக்கு செல்வப்பெருந்தகை விளக்கம்



காங்கிரஸுக்கு கூடுதல் தொகுதிகள் கொடுத்ததுபோல எங்களுக்கும் வேண்டும் என கம்யூனிஸ்ட் கட்சிகள் கேட்பது நியாயம் இல்லை என தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை தெரிவித்திருக்கிறார்.

திமுக கூட்டணியில் கூடுதல் தொகுதிகளை கம்யூனிஸ்ட் கட்சிகள் எதிர்பார்க்கின்றன. ஆனால் கூட்டணிக்கு புதிதாக கட்சிகள் வந்திருப்பதால் திமுக தர மறுக்கிறது. இதனால் தொகுதி ஒப்பந்தம் இன்னும் இறுதியாகாத சூழல் நிலவுகிறது.

இதற்கிடையில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் சண்முகம்,

காங்கிரசுக்கும் திமுகவுக்கும் கூடுதல் தொகுதிகள் வழங்கப்படும் போது இடது சாரி கட்சிகளுக்கு கூடுதல் தொகுதிகள் தர முடியாது என்று சொல்வதில் எந்த ஒரு நியாயமும் இல்லை என்றார்.

இதற்கு நேற்று பதிலளித்த செல்வப்பெருந்தகை, நாங்கள் ஒரு தேசிய கட்சி. திமுக எங்களுக்கு 110, 63, 41, 25 என தொடர்ச்சியாக தொகுதிகளை குறைத்தது. எனவே இந்தமுறை 41 தொகுதிகள் வேண்டும் என எங்களது தலைமை கேட்டது. ஆனால் அதையும் குறைத்துதான் கொடுத்திருக்கிறார்கள். தமிழகத்தை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக மூன்று தொகுதிகள் அதிகமாக கொடுத்ததை மன நிறைவோடு வாங்கியிருக்கிறோம்.

இப்படியான சூழலில் காங்கிரஸுக்கு கூடுதல் தொகுதிகள் கொடுத்ததுபோல எங்களுக்கும் வேண்டும் என கம்யூனிஸ்ட் கட்சிகள் கேட்பது நியாயம் இல்லை.

உங்களுடைய உரிமையை கேளுங்கள். முதல்வருக்கு மனம் இருக்கிறது; இருந்தால் கொடுப்பார்; எங்களுடைய வேதனையை தோழமை கட்சிகள் புரிந்து கொள்ள வேண்டும் என்றார்.

## அரசு சேவைகள் கிராமங்களைச் சென்றடைவதில் கிராம அஞ்சல் ஊழியர்கள் முக்கிய பங்காற்றுகின்றனர்: மத்திய இணையமைச்சர் புகழாரம்



அரசு சேவைகள் கிராமங்களைச் சென்றடைவதில் கிராம அஞ்சல் ஊழியர்கள் முக்கிய பங்காற்றுவதாக மத்திய இணையமைச்சர் பெம்மசானி சந்திரசேகர் தெரிவித்தார்.

தமிழக அஞ்சல் துறை சார்பில், கிராம அஞ்சல் ஊழியர்கள் மாநாடு நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மையத்தில் நேற்று நடைபெற்றது. இதில் மத்திய தொலைத்தொடர்பு துறை இணையமைச்சர் பெம்மசானி சந்திரசேகர் சிறப்பு விருந்தினராக பங்கேற்றார்.

தமிழக அஞ்சல் வட்டத்தில் சிறப்பாக பணியாற்றிய 10 சிறந்த கிராம அஞ்சல் ஊழியர்களைப் பாராட்டி விருது வழங்கி கவுரவித்தார். பின்னர் அவர் பேசியதாவது: இதயத் துடிப்பு சமூகங்களை இணைப்பதிலும், கடைசி நிலை வரை அரசு நிர்வாகத்தைக் கொண்டு செல்வதிலும் அஞ்சல் துறை பங்காற்றுகிறது.

கிராமப்புற அஞ்சல் ஊழியர்கள் கிராமப்புற இந்தியாவின் இதயத் துடிப்பாக திகழ்கின்றனர். அவர்கள் நாடு முழுவதும் உள்ள மக்களுக்கு அரசு சேவைகளைக் கொண்டு செல்கின்றனர்.

கடிதங்கள் முதல் பார்சல்கள் வரையும், அரசுத் திட்டங்கள் முதல் வங்கிச் சேவைகள் வரையும், ஆதார் முதல் பாஸ்போர்ட் சேவைகள் வரையும், கிராமங்களையும், தெருக்களையும், வீடுகளையும் அஞ்சல் ஊழியர்கள் சென்றடைகின்றனர்.

கடும் வெயிலிலும், கொட்டும் மழையிலும், இந்த ஊழியர்கள் நம்பிக்கையின் பாலமாக, கிராமப்புறப் பகுதிகளுக்கு சேவை செய்கின்றனர்.

இந்திய அஞ்சல் துறையின் பார்சல் வருவாய் தற்போது ஆயிரம் கோடி ரூபாய்க்கும் குறைவாக உள்ளது. அதேநேரத்தில், தனியார் கூரியர் நிறுவனங்கள் சுமார் ரூ.6 ஆயிரம் கோடி ஈட்டுகின்றன.

இன்றைய சரக்குப் போக்குவரத்துச் சந்தை சுமார் 10 பில்லியன் டாலர் (ரூ.90 ஆயிரம் கோடி) வாய்ப்பைக் கொண்டுள்ளது. 2031-ம் ஆண்டுக்குள் இது 20 பில்லியன் டாலராக (ரூ.1.8 லட்சம் கோடி) ஆக வளரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்வதில் அஞ்சல் ஊழியர்கள் தீவிரமாகப் பணியாற்ற வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார். தமிழக அஞ்சல் வட்டம் ஒட்டுமொத்த வருவாயில் நாட்டிலேயே 2-வது இடத்தில் உள்ளது.

இந்திய அஞ்சல் துறையின் பாரம்பரியத்தை நிலைநிறுத்த அஞ்சல் ஊழியர்கள், அர்ப்பணிப்புடன் சேவைகளை வழங்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

நிகழ்ச்சியில், தமிழக வட்ட தலைமை அஞ்சல் துறை தலைவர் மரியம்மா தாமஸ், சென்னை நகர மண்டலத் தலைவர் ஜி.நடராஜன் உட்பட பலர் கலந்துகொண்டனர். ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஊழியர்கள் பங்கேற்றனர்.

## மதச்சார்பின்மை கொள்கையில் அணுவளவும் மாற மாட்டோம்: இஃப்தார் நிகழ்ச்சியில் பழனிசாமி உறுதி



மதச்சார்பின்மை, சமூக நல்லிணக்கம் உள்ளிட்ட அடிப்படை கொள்கையில் இருந்து அணுவளவும் பிறழ மாட்டோம் என்று அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி தெரிவித்தார்.

அதிமுக சார்பில் இஃப்தார் நோன்பு திறப்பு நிகழ்ச்சி, சென்னை எழும்பூரில் நேற்று நடைபெற்றது. இதில் கட்சியின் பொதுச்செயலாளர் பழனிசாமி பேசியதாவது: ஒரு கட்சியின் பொதுச்செயலாளர் தனது சொந்த செலவில் இஃப்தார் நிகழ்வு நடத்துவதை முதலில் தொடங்கி வைத்தவர் ஜெயலலிதா.

இஸ்லாமியர்களை அவர் அதிகம் நேசித்தார். அவரது விசுவாசத் தொண்டர்களான நாம், அதை தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறோம். அனைத்து சமயங்களையும் மதிக்கும் மக்களைக் கொண்ட அற்புதமான மாநிலம் தமிழகம்.

உங்கள் ஆசீர்வாதத்தையும் அன்பையும் பெற்று நானும் மதச்சார்பின்மை, சமய நல்லிணக்கம் உள்ளிட்டவற்றை உயிர் மூச்சென கொண்டு தொடர்ந்து உழைத்து வருகிறேன். எம்ஜிஆர், ஜெயலலிதா ஆட்சிக் காலமும், எனது ஆட்சியும் சிறுபான்மை மக்களுக்கு பொற்காலமாக அமைந்ததை வரலாறு சொல்லும்.

அதிமுக சார்பில் இஃதார் நோன்பு திறப்பு எழும்பூரில் நேற்று நடைபெற்றது. அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி, பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன், அமமுக தலைவர் டிடிவி தினகரன், தமாகா தலைவர் ஜி.கே.வாசன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். அதிமுக சார்பில் இஃதார் நோன்பு திறப்பு எழும்பூரில் நேற்று நடைபெற்றது. அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி, பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன், அமமுக தலைவர் டிடிவி தினகரன், தமாகா தலைவர் ஜி.கே.வாசன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இந்த ஆட்சியின் அவலங்களை தூய்மைப்படுத்த வேண்டிய கடமை நமக்கு உள்ளது. அதை அர்ப்பணிப்போடும், அன்போடும் செய்ய வேண்டும். எந்தச் சூழ்நிலையிலும் அடிப்படைக் கொள்கையில் இருந்து அணுவளவும் பிறழ மாட்டோம். மதச்சார்பின்மை, சமூக நல்லிணக்கம், சட்டம் ஒழுங்கு பாதுகாப்பில் சமரசமற்ற உறுதி, எம்ஜிஆர், ஜெயலலிதா வழியில் எல்லோருக்கும் எல்லாம் என்றவாறு ஆட்சி நடத்துவோம்.

திமுகவும், கூட்டணிக் கட்சியினரும் ஏதோ அவர்கள்தான் சிறுபான்மை மக்களை காத்துக் கொண்டிருப்பது போல தோற்றத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். உண்மையில் சிறுபான்மை மக்களை கண்ணை இமை காப்பதுபோல காப்பது அதிமுக தான் என்றார்.

இந்நிகழ்ச்சியில், அதிமுக அவைத் தலைவர் தமிழ்மகன் உசேன், பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன், அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன், தமாகா தலைவர் ஜி.கே.வாசன், ஐஜேகே நிறுவனர் பாரிவேந்தர், புரட்சி பாரதம் தலைவர் பூவை ஜெகன்மூர்த்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

"ULLATCHI TODAY" owner and Published : R. Ravi, No. 35/63, Cheriyan Nagar, 3rd Street, New Washermenpet, Chennai - 600 081. and Printed by him at CHENNAI OFFSET PRINTERS, No. 19/1, 21/2, Kitabath Khan Bhadur Street, Ellis Road, Chennai - 600 002. E-mail: ullatchitoday@yahoo.com, Cell : 9003837900, Editor : R. RAVI